நாள்: 25.11.2025.
O.S. No. 02 / 2023
பெயர்: அய்யம்பெருமாள், த/பெ. முருகையன்
வா.சா.4

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு 1996–ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆன உடன் நெம்மேலி திடம் தெருவில் உள்ள கூரை வீட்டிற்கு குடிபெயர்ந்தேன் என்றாலும், எனக்கு மூன்று பிள்ளைகள் என்றாலும் சரிதான். எனது மகன் ஜே.சி.பி ஆப்பரேட்டராகவும் மற்றொரு மகன் கூலிவேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். மூன்றாவது மகன் சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் தனியார் கம்பெனியில் வேலை செய்து கை உடைந்ததால் அந்த வேலைக்கு செல்வதில்லை. மூன்று பிள்ளைகளும் என்னுடன் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தற்பொழுது மருதுவாஞ்சேரியில் 2009–ம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறேன். வழக்குரையில் உள்ளது எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமான பத்திரத்தில் உள்ளதும் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது இந்திரா நகரில் வாக்களித்து வருகிறேன். எனது வீடு தற்பொழுது மருதுவாஞ்சேரி பிரதான சாலையில் உள்ளது. கதவு எண் நினைவில்லை. எனது குடியிருப்புகள் 1996 லிருந்து மருதுவாஞ்சேரி மற்றும் நெம்மேலியில் மட்டும் உள்ளது என்றால் சரிதான். சொத்துக்களை எனது தந்தை ஆறு பேருக்கும் பிரித்து கொடுத்தார். வழக்குரையில் கூறியுள்ளதுபோல் நாங்கள் அண்ணன் தம்பிகள் ஆறு பேருக்கும் இடையில் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி நடராஜன் மனைவி பெயர் மேனியம்மாள் என்றாலும் அவர்கள் ஒரு மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த மாடி வீடு இருந்த இடத்தில் அதற்கு முன்பு கூரை வீடு இருந்தது என்றால் சரிதான். எனக்கு லாப்டி மூலம் ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு லாப்டியில் நிலம் வழங்கப்பட்டு அதை ராஜாவிற்கு விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குள் வேலி அடைப்பு உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரையில் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது குடும்ப அட்டை மருதுவாஞ்சேரி மெயின்ரோட்டு முகவரியில் உள்ளது என்றால் சரிதான். நான் நெம்மேலியில் இருந்த போது எனக்கு குடும்ப அட்டை இல்லை என்றால் சரிதான். வாய்மொழியாக எனது தகப்பனார் சொத்தை பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மீனாட்சி சுந்தரம் மற்றும் பழனியப்பா பெயரில் உள்ளது. பட்டா தற்பொழுது நடராஜன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடராஜன் தேவர்கோட்டை செட்டியாரிடம் பணம் கொடுத்துவிட்டு தனது பெயருக்கு பட்டா மாற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விபரத்தில் நடராஜன் பெயரில் பட்டா உள்ள விபரத்தை தெரிவித்தேனா என்றால் இல்லை. அந்த பட்டாவை எனது

பெயருக்கு மாற்ற நான் மனு செய்தேனா என்றால் இல்லை. எனது சகோதரர் மனு அளித்தார். எனது சகோதரர்கள் யார் யார் என்றால் கணேசன், ஜெயராமன், பாண்டியன் ஆகும். பட்டா மாறுதல் விண்ணப்பம் செய்தது தொடர்பாக எந்த பதிலும் அரசு சார்பில் தெரிவிக்கவில்லை. அந்த விபரத்தை வழக்குரையில் வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சொத்துக்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் அரசிடம் மனு அளித்த விபரம் தொடர்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதி நடராஜன் கிரயத்திற்கு வாங்கி எங்களுக்கு வீடு கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. 5–ம் வாதி பூந்தோட்டத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் வாதி பூந்தோட்டத்தில் வாடகைக்கு குடியிருக்கிறார் என்றால் சரிதான். நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், பட்டா பெற்றுள்ள 1–ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் 1–ம் பிரதிவாதியின் அனுமதி பெற்று வழக்கு சொத்துக்களில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 4, 5 வாதிகள் வெளியூரில் குடியிருப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.12.03 15:46:01 +0530